**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF UTHUKULI**

**OS 06-2021**

**PW-1**

**பெயர் :** பாப்பாத்தி

**க/பெ :** காட்டுராஜ்

**தேதி :** 30.01.2024

**<u>சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் 2, 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

4. எனது தாயார் பாப்பாத்தியின் வாரிசு சான்று தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் மாரநாயக்கர் மற்றும் பாப்பாத்தியின் மகள் என்று காட்டுவதற்கு எனது பிறப்பு சான்றோ அல்லது வேறு ஏதேனும் ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரிதான், அவ்வாறு எந்த ஆவணத்தையும் நான் இதுவரையில் பெறவில்லை. நான் இவ்வழக்கில் இதுவரையில் பொதுவிளம்பரம் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

5. மேற்படி மாரநாயக்கருக்கும் 1ம் பிரதிவாதிக்கும் எப்போது எங்கு திருமணம் நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் தாவாவில் சொல்லியுள்ளதுபோல் மாரநாயக்கர் மற்றும் எனது தாயார் பாப்பாத்திக்கும் இடையே முதல் திருமணம் நடைபெறவில்லையென்றால் சரியல்ல. அதன் காரணமாகத்தான் எனது மனு நிராகரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. தாவாவை காலம் தாழ்த்தி உண்மை சங்கதிகளை மறைத்து தாக்கல் செய்துள்ளதால் இத்தாவா தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

**<u>9, 10 பிரதிவாதிகளின் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

**(9, 10 பிரதிவாதிகளின் வேண்டுகோளுக்கிணங்க, அவர்களது தரப்பு குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது).**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சி கையெழுத்தும்/கைரேகை பெறப்பட்டது.

B DHARANEETHER

Digitally signed by B DHARANEETHER
Date: 2024.01.30 19:54:19 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
ஊத்துக்குளி.